# இயல் -1

# 1.2. ஒன்றல்ல இரண்டல்ல

## I. சொல்லும் பொருளும்

- ஒப்புமை – இணை
- முகில் – மேகம்
- அற்புதம் – விந்தை
- உபகாரி – வள்ளல்

## II. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **பகைவரை வெற்றி கொண்டவரைப் பாடும் இலக்கியம் ______.**

A. கலம்பகம்
B. பரிபாடல்
C. பரணி
D. அந்தாதி

விடை : பரணி

2. **வானில் ____ கூட்டம் திரண்டால் மழை பொழியும்.**

A. அகில்
B. முகில்
C. துகில்
D. துயில்

விடை : முகில்

3. **‘இரண்டல்ல’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______.**

A. இரண்டு + டல்ல
B. இரண் + அல்ல
C. இரண்டு + இல்ல
D. இரண்டு + அல்ல

விடை : இரண்டு + அல்ல

4. **‘தந்துதவும்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______.**

A. தந்து + உதவும்
B. தா + உதவும்
C. தந்து + தவும்
D. தந்த + உதவும்

விடை : தந்து + உதவும்

5. **‘ஒப்புமை + இல்லாத’ என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ____.**

A. ஒப்புமைஇல்லாத
B. ஒப்பில்லாத
C. ஒப்புமையில்லாத
D. ஒப்புஇல

விடை : ஒப்புமையில்லாத

## III. குறுவினா

1. **தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாகக் கவிஞர் கூறுவன யாவை?**

தமிழ்நாட்டில் வீசும் தென்றலில் தேன் மணம் கவழும். சுவைமிகு கனிகளும் பொன் போன்ற தானியக் கதிர்களும் விளையும். தமிழ்நாட்டின் நன்செய் நிலவளம் ஒன்றிரண்டல்ல பலவாகும்.

2. **‘ஒன்றல்ல இரண்டல்ல ’ – பாடலில் இடம் பெற்றுள்ள வள்ளல்கள் குறித்த செய்திகளை எழுதுக.**

- முல்லைக்குத் தேர் தந்த வள்ளல் வேள்பாரி.
- புலவரின் சொல்லுக்குத் தன் தலையையே தரத் துணிந்தவன் குமண வள்ளல்.

IV. சிறுவினா

**தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுவன யாவை ?**

- பகைவரை வென்று பாடுவது பரணி இலக்கியம்.
- பரிபாடல் கலம்பக நூல்கள், எட்டுத்தொகை, திருக்குறள், சங்க இலக்கியங்கள் – ஆகியன தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுகிறார்.